இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 267 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 26 – சனிக்கிழமை 09 மே 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 267 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 26 - Saturday 09 May 2026 - Chennai 8 Pages ₹ 5.00


## தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்!

# புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம்!

## தமிழ்நாடு ஆளுநருக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, மே.9-

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும், தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் கடந்த மாதம் 23-ஆம் தேதி சட்டமன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றது. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியும், எடப்பாடி பழனிசாமி தலைமையிலான என்.டி.ஏ. அணியும் மற்றும் ஜோசப் விஜயின் த.வெ.க.வும், சீமானின் நாம் தமிழர் கட்சியும் என நான்கு முனைப் போட்டியாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது.

நடந்து முடிந்த தேர்தலின் வாக்குகள் இம்மாதம் 4-ஆம் தேதி எண்ணப்பட்டன. இதில் விஜய் கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்று அதிக இடங்களை பெற்ற கட்சியாக இருந்தது. ஆனாலும் அக்கட்சிக்கு அறுதி பெரும்பான்மை (118) கிடைக்காத காரணத்தால் ஆட்சி அமைக்க முடியவில்லை.

அதிக இடங்களில் வென்ற கட்சி என்ற முறையில் ஆட்சி அமைக்க தம்மை அனுமதிக்க வேண்டும் என்றும், சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கிறேன் என்றும் குறிப்பிட்டு, ஜோசப் விஜய் தமிழ்நாடு ஆளுநர் அர்லேகரை சந்தித்து கடிதம் கொடுத்தார்.

கடிதத்தை பெற்றுக்கொண்ட ஆளுநர், மெஜாரிட்டியான 118 தொகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்களுடன் பட்டியல் கொடுத்தால்தான் ஆட்சி அமைக்க அழைக்க முடியும் என்று விஜயை மறுநாள் நேரில் அழைத்து தெரிவித்தார்.

இதற்கிடையே வேறு சில கட்சிகளின் ஆதரவும் தமக்கு உள்ளதாக விஜய் மீண்டும் தெரிவித்து அதற்கான பட்டியலையும் நேற்று வழங்கினார்.

மெஜாரிட்டி இல்லாவிட்டாலும் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியை ஆட்சி அமைக்க அழைத்து, சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க அனுமதிக்க வேண்டும் என்று பலரும் ஆளுநருக்கு வலியுறுத்தி இருந்தனர்.

ஆனாலும் நேற்றிரவு வரை ஆட்சி அமைப்பது தொடர்பாக எவ்வித அறிவிப்பும் ஆளுநர் தரப்பிலிருந்து வரவில்லை.



விஜய் ஆட்சி அமைக்க தி.மு.க. குறுக்கே நிற்காது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்நாடு ஆளுநர், ஆட்சி அமைப்பதில் தாமதம் ஏற்படுத்துவதையடுத்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய ஆட்சி அமைக்க ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில்,

**தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டு விட்டது. ஏற்கனவே இருந்த சட்டமன்றத்தையும் கலைத்து ஆளுநர் அவர்கள் ஆணையும் பிறப்பித்து விட்டார்.**

**இப்படியொரு நிலையில், தேர்தலில் வென்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கும், மாநிலத்தின் நலனை முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் மிக முக்கியப் பணி!**

**இந்தச் சூழ்நிலையில் அரசு அமைவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசியல் சட்டப்படி, புதிய ஆட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் அவர்கள் உடனடியாக எடுத்திட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### +2 பொதுத் தேர்வு! வெற்றி பெற்றுள்ள மாணவர்களுக்கு வாழ்த்துகள்!

## கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை!

### வலைதளப் பதிவில் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

*சென்னை, மே 9 -*

*பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ - மாணவிகளுக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-*

***பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ - மாணவிகளுக்கும் வாழ்த்துகள்!***

***95.2% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். Anbil_Mahesh அவர்கள் தொடர்புகொண்டு, சென்ற ஆண்டைவிட அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று பெருமிதத்தோடு கூறியபோது, பெருமகிழ்ச்சி அடைந்தேன்.***

***மாணவச் செல்வங்கள், வாழ்வில் மேன்மையடைய மேற்படிப்புகளில் மேலும் கவனம் செலுத்திப் படியுங்கள். இத்தேர்வில் இம்முறை தேர்ச்சி பெறத் தவறியவர்கள் மனம் தளர வேண்டாம்;***

***உங்களுக்கான அடுத்தடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுங்கள்!***

***கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை!***

*இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

---

### கடினமான நேரங்களில்

## கூட்டணிக் கட்சிகளை கைவிடக்கூடாது!

### காங்கிரஸ் கட்சிக்கு அகிலேஷ்யாதவ் கண்டனம்!

*லக்னோ, மே 9-*

*கடினமான நேரத்தில் கூட்டணிக் கட்சிகளை கைவிடக் கூடாது என்று காங்கிரஸ் கட்சிக்கு உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. இந்த நிலையில், கொல்கத்தாவுக்கு பயணம் மேற்*



*கொண்ட உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சரும் சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ் யாதவ், மம்தா பானர்ஜியை நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக மம்தா பானர்ஜி மற்றும் திமுக தலைவர் மு.க. ஸ்டாலினுடன் இருக்கும் புகைப்படங்களை பகிர்ந்துள்ள அகிலேஷ் யாதவ், கடினமான நேரத்தில் ஒருவரைக் கைவிடுபவர்கள் நாங்கள் அல்ல என்று பதிவிட்டுள்ளார்.*

*தமிழ்நாட்டில் தேர்தலுக்குப் பின்பு திமுக கூட்டணியில் இருந்து விலகி, தவெக கூட்டணியில் சேர்ந்த காங்கிரஸை அகிலேஷ் யாதவ் கடுமையாக விமர்சித்துள்ளார். உத்தரப்பிரதேசத்தில் கூட்டணி தொடரும் என அறிவிக்கப்பட்ட நிலையில், காங்கிரஸ் கட்சியின் நம்பகத்தன்மை மீது அகிலேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.*

---

### தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான ஆட்சி!

## தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கருத்துக்கு வரவேற்பு!

### த.வெ.க.விற்கு ஆதரவு இல்லை என்றும் — பேராசிரியர் கே.எம். காதர் மொகைதீன் அறிக்கை!

சென்னை, மே 9 -

தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படுவதற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநர் அவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முழுமனதோடு வரவேற்கிறது என்றும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடர்கிறது என்றும், அக்கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகைதீன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**இது குறித்து பேராசிரியர் காதர் மொகைதீன் அவர்களின் அறிக்கை வருமாறு:**

தமிழகத்தில் நடந்த முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெற்று பாபநாசம், வாணியம்பாடி ஆகிய இரண்டு தொகுதி



களில் முறையே ஏ.எம். ஷாஜஹான், எஸ்.எஸ்.பி. சையத் பாருக் பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படுவதற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக ஆளுநர் அவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முழு மனதோடு வரவேற்கிறது.

சட்டமன்றத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீகினுடைய இரண்டு உறுப்பினர்களும் மேதகு ஆளுநர் மேற்கொள்ளக் கூடிய அரசு அமைப்புக்கான அனைத்து செயல்பாடுகளுக்கும் துணை நிற்பர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர் மொகைதீன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கழகத் தலைவருடன் சந்திப்பு!**

மேலும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை பேராசிரியர் கே.எம். காதர் மொகைதீன் நேற்று சந்தித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடர்கிறது என்றும் த.வெ.க.விற்கு ஆதரவில்லை; அது வெறும் வதந்தி என்றும் தெரிவித்துள்ளார்.

**பேட்டி!**

தொடர்ந்து பேராசிரியர் கே.எம்.காதர் மொகைதீன் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், தி.மு.க. கூட்டணியில் நேற்றும் இருந்தோம், இன்றும் இருக்கிறோம், நாளையும் இருப்போம் என்று தெரிவித்தார்.